RPAD

-115-

7047-

0 2 FEB 2024

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

சென்னை-600 015

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - கடலூர் மாவட்டம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - பணியில் இருக்கும் போது காலமான திரு.எம்.பாண்டியன், ஈப்பு ஓட்டுநரின் மனைவி திருமதி.க.சிவந்தி, இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை–IIஆக பணிநியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ–5) துறை

அரசாணை (3ப) எண்.01

04 FEB 2024

ஆட்சி - 608 302.

நாள் 19.01.2024
சோபகிருது, தை 05
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்: 23.01.2020.
2. கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.பஅ3/5894/2019, நாள் 31.08.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 36883/2021/ டி1, நாள் 02.06.2022.
4. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 08.03.2023.

1128/2020

000420

*****

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து 04.01.2019 அன்று பணியிடைக்காலமான திரு.எம்.பாண்டியன், என்பவரின் வாரிசுதாரரும் மனைவியான திருமதி.க.சிவந்தி, என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை–II–ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 04.09.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் திரு.எம்.பாண்டியன் தகுதிகாண்பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மனைவி திருமதி.க.சிவந்தி, கருணையடிப்படையில் பணிநியமனம் அளிக்கக்

கோரி 01.11.2019 அன்று விண்ணப்பித்தார் என்றும் அவரது பிறந்த தேதி 19.05.1977 என்றும். பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 42 என்றும் அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்கு பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்று மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தில், இளநிலை உதவியாளர் நிலையில் ஊர்நல அலுவலர் நிலை–IIஆக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.க.சிவந்தி, என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 04.09.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்.
திருமதி.க.சிவந்தி, ஊர்நல அலுவலர் நிலை–II,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, கடலூர் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மாவட்டம்)
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கடலூர் மாவட்டம்.
<u>நகல்:</u>
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா.சேகர்
பிரிவு அலுவலர்

ந.க.எண் பஅ3/5894/2019
நாள் : 28.02.2024.

மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சி)
கடலூர் மாவட்டம்

// சார்வு செய்யப்படுகிறது //

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வ)
கடலூர் மாவட்டம்

பெறுதல்

திருமதி. K. சிவந்தி,
ஊர்நல அலுவலர் நிலை II,
ஊராட்சி ஒன்றியம்,
குமராட்சி. (உரிய வழியாக)

ந.க.எண் : அ1/1128/2020
நாள் : 07.03.2024

ஊராட்சி ஒன்றியம்
குமராட்சி

// நகல் சார்வு செய்யப்படுகிறது //

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
குமராட்சி.

பெறுதல்

திருமதி. K. சிவந்தி
ஊர் நல அலுவலர் நிலை - II
ஊராட்சி ஒன்றியம்
குமராட்சி.